# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.100/2011

**2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சீனிவாசன், Grade III Bench Clerk அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர் •** | **:** | **ரத்தினகுமார்** | **தொழில்** | **:** | |
| **தந்தை பெயர்•** | **:** | **சிற்சபை** | **கிராமம் •** | **:** | |
| **வயது •** | **:** | **74** | **வட்டம் •** | **:** | **காஞ்சிபுரம்** |
| **நேரம் •** | **:** | **முற்பகல் 11.50 முதல் 12.00 வரை** | **•** | **:** | |

**பி.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. கடந்த 21.02.2003 தேதியிட்ட சுவீகார பத்திரம் அசலினை தாக்கல் செய்கிறேன். **அந்த சுவீகார பத்திரம் அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ( மேற்கண்ட ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று வாதி தரப்பு வழக்கறிஞர் அந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்க்கு ஆட்சேபணை தெரிவித்தார்) கடந்த 22.12.2073 அன்று Government Gesset ல் மேற்படி சுவீகாரம் எடுக்கப்பட்டது வெளியிடப்பட்டது. **அது Government Gesset Publication பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட ஆவணம் பி.சா.ஆ.1 உடன் சம்பந்தப்பட்டது என்பதால் மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்வதற்கு வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார். கடந்த 29.04.2004 அன்று பாலமுருகன் எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட பத்திர்தின்

சான்றளிக்கப்பட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். **அந்த தான செட்டில்மெண்ட பத்திரம் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கடந்த 10.10.2007 அன்று முருகேசன் என்பவருக்கு நான் அளித்த பொது அதிகார ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். **அந்த பொது அதிகார ஆவணம் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட ஆவணங்கள் இரண்டும் வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. தாவாவை தள்ளுபடிசெய்யப்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒ/ப.ஆர்.இராஜேஸ்வரி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
காஞ்சிபுரம்